**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**

| | | |
|---|---|---|
| **MCOP No. 159/2020** | **நாள் – 25.08.2025** | **சாட்சி – ம.சா.1** |

**திருமதி. நித்யா, க/பெ. முருகானந்தம்**

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் விபத்து சமயத்தில் மாருதி கார் வாகனத்தில் பயணம் செய்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையானது மாருதி கார் ஓட்டுநர் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாருதி கார் ஓட்டுநர் குற்றத்தை ஒப்புக் கொண்டு அபராதம் செலுத்தியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. என் மாருதி கார் வாகனத்திற்கு எதிரே ஹீண்டாய் கார் வந்ததா என்றால் ஒரு கார் வந்தது மற்றும் என்ன கார் என்பது தெரியவில்லை. எதிரே வந்த காரில் பயணம் செய்தவர்களும் அடிபட்டார்கள் என்றால் தெரியவில்லை. நான் சென்ற காரில் வேறு யாருக்காவது அடிபட்டதா என்றால் இல்லை. இதே விபத்தில் சம்பந்தப்பட்ட மற்றொரு வழக்கானது MCOP 324/2019 என்ற வழக்கில் இந்த வழக்கின் 4ம் எதிர்மனுதாரர் நிறுவனம் சமாதானம் பேசி மக்கள் நீதிமன்றத்தில் சுமூக தீர்வு கண்டு நீதிமன்றத்தில் இழப்பீட்டை வைப்பீடு செய்துள்ளார்கள் என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தவிர வேறு ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் சரியாகி விட்டது என்றால் சரிதான். தலை பகுதியில் தளும்பு உள்ளது மற்றும் தலைவலி உள்ளது. எனக்கு வழங்கப்பட்ட ம.சா.ஆ.5 காயச்சான்றில் எனக்கு சாதாரண காயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு உபாதைகளோ, இயலாமையோ இல்லை என்றால் சரியல்ல. நான் பிரயாணம் செய்த மாருதி கார் ஓட்டுநர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாலும் அவர் குற்றத்தை ஒப்புக்

கொண்டு திருவிடைமருதூர் நீதிமன்றத்தில் அபராதம் செலுத்தி உள்ளதாலும்,இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட மற்றொரு மனுதாரருக்கு 4ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்கியுள்ளதாலும், இந்த 2ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீட்டுத் தொகையும் வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2025.08.25 18:37:24 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*